**கெபிதிகொல்லேவ பிரதேச சபையி - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கெபிதிகொல்லேவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் கெபிதிகொல்லேவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இவ்வறிக்கையின் 1.6.3(ஆ) பந்தியின் பரிந்துரைகளைத் தவிர கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் வேலை கடன்படுனராக குறிப்பிடப்பட்டிருந்த முகப்பு அலுவலகத்திற்கு உபகரணங்களை கொள்வனவு செய்ய கிடைந்த ரூபா.683,500 மீண்டெழும் மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக. | மூலதன உபகரணங்கள் கொள்வனவு செய்தலை மூலதன மானியமாக குறிப்பிட வேண்டும். |
| (ஆ) | டிகிரி ஹெந்ததேவ நீர் கருத்திட்டத்திற்கு மோடர் ஒன்றை கொள்வனவு செய்ய மீளாய்வாண்டில் சபை நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட ரூபா.125,700 செலவினை மீண்டெழும் செலவாக கணக்கீடு செய்திருந்ததுடன் கருத்திட்ட விரிவாக்கல் செலவினம் ரூபா.831,045 இனை சொத்துதொன்றாக மற்றும் மூலதன மானியமாக கணக்கீடு செய்திருக்கவில்லை. | | மூலதன சொத்துக் கொள்வனவு, ஆதன,பொறி உாகரணங்களாக இனங்காண வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் கடை வாடகை வருமானம் ரூபா.101,333 குறைத்து | -மேற்படி- | சரியான பெறுமதியை |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு பிரதேச சபை கருத்திட்ட உதவியின் கீழ் நிர்மாணித்த கருத்திட்டங்களின் பெறுமதி ரூபா.5,583,877 தொகை கூடுதலாக காட்டப்படடிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | பிரதேச அபிவிருத்தி உதவி கருத்திட்டத்தின் (LDSP) 2022 திசெம்பர் 31 திகதி காசுப் புத்தகம் பிரகார மீதி ரூபா.8,489,989 ஆன போதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா.5,341,080 ஆக ரூபா.3,148,909 தொகை குறைத்து காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 07 கணக்கு விடயங்களிக்குரியதாக மீளாய்வாண்டில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா.105,987,895 ஆனதுடன் அதற்கான குறிப்புக்கள் பிரகாரம் பெறுமதி ரூபா.96,594,319 ஆனதால் ரூபா.9,393,578 ஆன வித்தியாசமானது. | ஏற்றுக் கொள்வதாக. | அட்டவணைகள் நேரொத்த அறிக்கையுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | 03 கணக்கு விடயங்களிக்குரியதாக 2022 திசெம்பர் 31 திகதியன்று செயற்பாட்டு நடவடிக்கைகளுடனான காசுப்பாய்ச்சல் ரூபா.20,161,530 ஆன போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா.28,121,422 ஆக குறிப்பிட்டிருந்ததால் ரூபா.7,959,892 வித்தியாசமானது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | 2022 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்கள்/ உரிமை மாற்றங்கள் கூற்றில் குறிப்பிடப்பட்ட மீதிகள் மற்றும் பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்ட மீதிகளிற்கிடையில் ரூபா.12,902,091 வித்தியாசமானது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டு விரிவான வருமான கூற்றிற்குரியதான குறிப்பு இலக்கம் 10 பிரகாரம் 2022 சனவரி 01 திகதியன்று மிகையின் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | (பற்றாக்குறையின்) இனங்காணாத மூலதன மானியம் ரூபா.52,536,070 ஆன போதும் தேறிய சொத்துக்கள்/ உரிமை மாற்றங்கள் கூற்று பிரகாரம் அது ரூபா.50,591,759 ஆனதில் ரூபா.1,944,311 ஆன வித்தியாசமானது. | | |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுமதி ரூபா.28,230,286 ஆன 04 வருமான மற்றும் சொத்து விடயங்களிற்குரியதாக போதிய சான்றுகளை சமர்ப்பிக்காததனால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதிக் முடியவில்லை. | ஏற்றுக்கொள்வதாக. | உறுதிப்பாடுகளை சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று தேறிய சொத்துக்கள்/ உரிமை மாற்றங்கள் கூற்றில் முன்னைய காலப் பகுதியின் தவறாக சீராக்கம் செய்துள்ள ரூபா.17,687,415 மற்றும் ரூபா.18,981,173 ஆன மீதிகள் தொடர்பான உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணம் 1645 | ஒவ்வொறு மாத்தினதும் வாகன ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பித்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதாக. | நிதிப்பிரமாணம் பிரகாரம் மேற்கொள்ள எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவை விஞ்சிய வருமானம் ரூபா.1,444,662 தொகையாக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா.8,156,102 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | **2022** | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில் போடப்பட்ட வருமானம்** | **சேர்க்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம** | **பில் போடப்பட்ட வருமானம** | **சேர்க்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீத வரி மற்றும் வரி | 1,136,400 | 1,054,950 | 1,054,950 | - | 1,089,400 | 912,900 | 912,900 | - |
| (ii) | வாடகை | 12,599,100 | 10,753,122 | 10,691,032 | 5,929,861 | 8,516,450 | 6,912,515 | 3,668,024 | 5,867,771 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,410,603 | 1,241,216 | 832,819 | 593,380 | 2,337,902 | 1,545,341 | 1,455,178 | 184,983 |
| (iv) | ஏனைய வருமானம் | 3,236,970 | 4,318,157 | 3,442,770 | 5,222,225 | 2,812,010 | 1,869,040 | 409,928 | 4,346,838 |
| | | 19,383,073 | 17,367,445 | 16,021,571 | 11,745,466 | 14,755,762 | 11,239,796 | 6,446,030 | 10,399,592 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்பு பின்வருமாறு.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) **வீதவரியும் வரியும்** | | |
| 1987 இன் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 134 (1) பிரிவின் பிரகாரம் சபை அதிகார பிரதேசத்தில் முன்னேற்ற பிரதேசங்களில் அமைந்துள்ள அசையாத ஆதனமொன்றின் அல்லது அசையாத ஆதன வகையொன்றின் வருடாந்த பெறுமதியை அடிப்படைக் கொண்டு வீதவரி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதாக. | சட்டம் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| (i) J.C.B இயந்திரம் மற்றும் கல்உருளையை வாடகைக்கு வழங்கியதற்காக ஆண்டு 02 இற்கும் 03 இற்குமிடையிலான காலமாக அறவிட வேண்டிய ரூபா.734,723 ஆனது. | ஏற்றுக் கொள்வதாக. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | சபைக்கு சொந்தமான கடையறைகளிற்காக அறவிட வேண்டிய ரூபா.1,538,018 ஆன நிலவை வாடகையை அறவிட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | சபை குத்தகைக்கு வழங்கியிருந்த 15 வியாபார தளங்களிலிருந்து ஆண்டு 01 இற்கும் 08 இற்குமிடையிலான காலமாக அறவிட வேண்டியதாகவுள்ள ரூபா.2,940,809 ஆனது. | | |

**(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 76 நபர்களிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டிய முச்சக்கர வண்டி தரிப்பிட கட்டணம் ரூபா.98,400 தொகை ஆனது. | -மேற்படி - | -மேற்படி- |
| (ii) | சபையினால் நடாத்திச் செல்லப்படும் யகாவெவ நீர் கருத்திட்டத்திற்குரியதாக அறவிட வேண்டிய நிலுவை நீர் பட்டியல் மற்றும் நிலுவை இணைப்புக் கட்டணம் ரூபா.200,480 ஆனது. | -மேற்படி- | -மேற்படி- |

**(ஈ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டியதான நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.1,041,340 தொகை மற்றும் முத்திரை கட்டணம் ரூபா.4,180,833 தொகை கிடைத்திருக்கவில்லை. | அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்றாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளல்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

#### 3.1.1 மாடறுப்பு மடுவங்களை பேணிச் செல்லல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முஸ்லிம் எட்டவீரகொள்ள, எல்லவெவ ஆகிய பிரதேசங்களில் 02 மாட்டிறைச்சி வியாபார நிலையங்களை வருடாந்த குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் அவ் இறைச்சிக் கடைகளுக்கான | அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக. | மாடறுப்பு மடுவ அதிகார சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாடறுப்பு மடு வசதிகளை சபையினால் வழங்கியிருக்கவில்லை. | | |
| (ஆ) | 1988 ஆகஸ்ட் 23 திகதிய பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதிகள் வர்தமாணி அறிவித்தலில் 32 துணை விதியின் 09 பிரிவு பிரகாரம் அதிகார எல்லையில் பரிசோதிக்கப்படும் 01 கிலோ இறைச்சிக்காக ரூபா 10 இற்கு அதிகரிக்காத கட்டணமொன்றை சபை அறவிட வேண்டிய போதும் இறைச்சி பரிசோதனை மற்றும் சபையின் இலச்சினையை பயன்படுத்துவதற்காக கட்டணம் அறவிட சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு கிடைத்திருந்த 05 வாகனங்கள் ஆண்டு 01 இற்கும் 05 இற்குமிடையிலான காலமாக பயன்படுத்தப்படாது விறைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக் கொள்வதாக. | திருத்தி பயன்படுத்த அல்லது பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | திருத்தி பயன்படுத்த முடியுமான 02 வாகனங்கள் திருத்தப்படாது 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக விளைவற்று காணப்பட்டன. | திருத்தி எதிர்காலத்தில் பயன்படுத்துகிறேன். | பயன்பாடடிற்கு எடுக்க செயற்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| உக்கலடையாத கழிவுகளை முகாமை செய்வதற்காக மற்றும் சேதனப் பசளை உற்பத்திக்காக கிரிகொட்டுவெவ மாடறுப்பு மடுவம் அமைந்துள்ள காணியை ஒதுக்கியுள்ள போதும் அக்காளி விறைவற்று நிலவியதுடன் மாடறுப்பு மடுவமும் பயன்பாடின்றி விறைவற்று நிலவிது. | தற்போது இந் நிலைமையை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | தேவையான செயற்பாடுகளை விரைவில் எடுக்க வேண்டும். |